

கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளரும் முன்னாள் சட்டப்பேரவை துணை சபாநாயகருமான கு.பிச்சாண்டி வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் கோ.கண்ணன், ஒன்றிய செயலாளர்; சி.மாரிமுத்து மாவட்ட பிரதிநிதி நல்லூர் பழனி, ஏழுமலை, சந்திரசேகரன், அவைத் தலைவர் கிருஷ்ண மூர்த்தி, பொருளாளர் பெருமாள், ஒன்றிய துணை செயலாளரகள்; தண்டரை பாபு, வசந்தி விஜயகுமார், இளைஞர் அணி அமைப்பாளர் மஞ்சுநாதன், ஆசைதம்பி, கணேசன், ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள் கழக உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# இன்றைக்கும் ஸ்டாலின்தான் ஆளுகிறார்!

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை துவங்கி, கடந்த மூன்று ஆண்டுகளாக ஒரு கோடியே முப்பத்தியோரு லட்சம் மகளிருக்கு தொடர்ந்து திராவிடமாடல் ஆட்சியின் நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி வந்தார்.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்ததால், தேர்தல் ஆணையம் இதை நிறுத்த வழி இருக்கின்ற காரணத்தால், கடந்த பிப்ரவரி மாதமே, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்கான மூவாயிரம் ரூபாயை அனைவருக்கும் முன்கூட்டியே வழங்கி விட்டார்.

அத்தோடு நில்லாமல், கோடைக் கால சிறப்பு நிதியாக அனைத்து ரேஷன் கார்டு வைத்திருப்போருக்கும் ரூ. 2000த்தையும் வழங்கினார்.

அப்பொழுது அவர் தேர்தல் அறிக்கையில் கூறியபடி, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மே மாதம் முதல் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என்பது ஆயிரம் ரூபாய்க்குப் பதிலாக இரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தித் தருவோம் என்றும் வாக்குறுதி அளித்திருந்தார்.

தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்திருந்தால், இன்றைக்கு ஒவ்வொரு மகளிரின் அக்கவுண்ட்டிலும் ரூபாய் இரண்டாயிரம் வரவு வைக்கப்பட்டிருக்கும்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு விட்டது... ஒவ்வொரு மாதமும் 6ஆம் தேதி புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் 6 லட்சத்தி 28 ஆயிரம் மாணவ மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் தி.மு.க. ஆட்சியில் திட்டம் கொண்டு வரப்பட்டு வழங்கி வந்தார் அன்றைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்.

ஆனால் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட விஜய் அவர்கள் அதை வழங்காமல் இழுத்தடிக்கவே... சட்டமன்றத்தில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாணவர்களை காக்க வைக்காதீர்கள், உடனடியாக அந்த தொகையை தாருங்கள் என்று அழுத்தமாக வலியுறுத்தினார். நாங்கள் ஆட்சிக்கு வந்திருந்தால் அந்தத் தொகையை ரூ.1500 ஆக உயர்த்தித் தருவதாக வாக்குறுதி அளித்திருந்தோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதன் பிறகு அடுத்தநாள் அந்தப் பணத்தை மாணவ - மாணவிகளுக்கு வரவு வைத்த முதல்வர் விஜய், நேற்று ஒரு அறிக்கை கொடுத்து மகளிர் உரிமைத் தொகையை மறுசீரமைப்பு செய்ய வேண்டியுள்ளதால், மே மாத தொகையை நாள் குறிப்பிடாமல் விரைவில் கொடுப்போம் என்று பொத்தாம் பொதுவாக அறிக்கை கொடுத்து...

இதற்கான எதிர்வினை எப்படியுள்ளது... என்பதை விசாரணை செய்தும், தங்கள் ஆதரவாளர்கள் மூலம் இந்தப் பணம் வராவிட்டாலும் பரவாயில்லை என்று சொல்லி வீடியோ வெளியிட வைத்தும்... மக்கள் எதிர்ப்பு ஏதுமில்லை என்றால் இதை அப்படியே கிடப்பில் போட்டு விடலாம் என்றும் எண்ணினார் போலும்...

ஆனால், விஜய் அறிக்கை வந்த அடுத்த நிமிடமே பொங்கியெழுந்த தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இதற்கு கடும் கண்டனத்தை தெரிவித்ததோடு, நாளையே இதை வழங்க வேண்டும் என்றும் இல்லாவிட்டால் போராட்டம் வெடிக்கும் என்றும் அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து தி.மு.க.வினரும், சமூக வலைதளங்களில் தங்கள் கடுமையான எதிர்ப்பை இதற்கு தெரிவித்த நிலையில்... பொதுமக்கள் லட்சக்கணக்கானோர் வெகுண்டெழ துவங்கவே...



இன்றைக்கு தி.மு.க. அரசு கொடுத்துக் கொண்டிருந்த அந்த ஆயிரம் ரூபாயை வரவு வைத்து விட்டார் முதல்வர்.

ஆனால் அவர் மக்களுக்கு வாக்குறுதியாக அளித்திருந்த தொகையோ ரூபாய் 2500. அதை அவர் வழங்கவில்லை. இது தான் செய்தியாக வரவேண்டும். ஆயிரம் ரூபாயைக் கொடுத்து விட்டு முதல்வர் விஜய் அதிரடின்னு ஊடகங்களும், அவர் ஆதரவாளர்களும் கொக்கரிக்கின்றனர். ஸ்டாலினின் மிரட்டலுக்கு, பணிந்தார் விஜய்ன்னு தான் தலைப்பிட்டு ஒரு நல்ல ஊடகம் செய்தி வெளியிட்டிருக்க வேண்டும்.

**சௌமியன் வைத்தியநாதன்**

கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்



காரணம் ஜனநாயகத்தில், சட்டமன்றமும், நீதிமன்றமும், எதிர்க்கட்சியும், ஊடகங்களும் நான்கு தூண்கள் என்று கூறப்பட்ட நிலையில், நீதிமன்றமும், எதிர்க்கட்சியும் பொய்த்துப் போனாலும் ஊடகங்கள் ஜனநாயகத்தை தூக்கி நிறுத்தும் கடமையை நிறைவேற்ற வேண்டும்.

மக்களுக்கான குரலாகத்தான் எதிர்க்கட்சியும், ஊடகமும் செயலாற்ற வேண்டும். எதிர்க்கட்சி குரலை உயர்த்திய நிலையில், ஊடகங்களும் அதை கடைப்பிடிக்க வேண்டும். அப்படி செயலாற்றினால் தான் ஆட்சி மக்களுக்கானதாக இருக்கும். இல்லாவிட்டால் சமூக சீரழிவு தான் ஏற்படும்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், காலைச்சிற்றுண்டி, நான் முதல்வன் உள்ளிட்ட நான் கொண்டு வந்து சிறப்பாக நிறைவேற்றிய திட்டங்களை யார் ஒருவர் நிறுத்த முயன்றாலும் புரட்சி வெடிக்கும், ஆட்சி மாறும்... ஆகையால் அந்த திட்டங்கள் தொடரும் வரை இந்த ஸ்டாலின் தான் தமிழ்நாட்டை ஆட்சி செய்வான் என்று தி.மு.க. தலைவர் சொன்னது இன்று நிஜமாகியிருக்கின்றது.

இன்றைக்கும் ஸ்டாலின் தான் ஆள்கிறார்.

# விருதுநகர் தெற்கு மாவட்டக் கழக கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*விருதுநகர், மே 17-*

*விருதுநகர் தெற்கு மாவட்டக் கழக கூட்டம் 20.05.2026 புதன் கிழமை காலை 10 மணிக்கு விருதுநகர் சரஸ்வதி கிராண்ட் திருமண மண்டபத்தில் மாவட்டக் கழக அவைத் தலைவர் ச.செல்வமணி தலைமையில் நடைபெற உள்ளது. தெற்கு மாவட்டக் கழக செயலாளர் கே. கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்களும், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. அவர்களும் சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.*



*இக்கூட்டத்தில் தொகுதி பார்வையாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*பொருள் : 1. நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் குறித்து.*

*2. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள்.*

*3. கழக ஆக்க பணிகள்.*

# ரேஷன் - மதுபானக் கடைகளில் மாமூல் வசூல்!

## த.வெ.க. கட்சியினர் செயல்பாட்டால் பொதுமக்கள் அதிர்ச்சி

*மதுரை, மே 17-*

*அற்பனுக்கு வாழ்வு வந்தால் என பழமொழி சொல்வார்கள் அந்த வகையில் போலியான வாக்குறுதிகளை கொடுத்து மாயாஜால ஆட்சி நடத்தி வரும் த.வெ.க.அரசின் நிர்வாக திறனற்ற ஆட்சி என்பது நாள்தோறும் அம்பலப்படுத்தப்பட்டு வருகிறது.*

*அதிலும் தென் மாவட்டங்களில் முக்கிய மாவட்டமாக திகழக்கூடிய மதுரையில் ரேஷன் கடைகள் டாஸ்மாக் மதுபானக் கடைகளில் புகுந்து த.வெ.க. இளைஞர்கள் மிரட்டி மாமுல் வசூலித்து வருவது பொது மக்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.*

*ஒருபுறம் அரசு ஒப்பந்த பணிகளில் தமிழக வெற்றி கழகத்தைச் சார்ந்தவர்கள் பங்கேற்க கூடாது என வெளிப்படையாகவே சொல்லிவிட்டு உள்ளே புகுந்து மாமுல் வசூலிப்பது இதுதான் தூய சக்தியின் அடையாளமா என பொதுமக்கள் வேதனையுடன் கேள்வி எழுப்பி வருகின்றனர்.*

*யோக்கியன் வர்றான் சொம்ப தூக்கி உள்ளேவை எனச் சொல்லுகிற அளவிற்கு மதுரையில் த.வெ.க. கட்சியினரின் அட்ராசிட்டி அதிகரித்து வரும் சூழ்நிலையில் வாக்களித்த பொது மக்கள் தாங்கள் ஏமாற்றம் அடைந்ததை எண்ணி வேதனை அடைகின்றனர்.*

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் பி.கீதா ஜீவன் அறிவிப்பு!



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் ஜி.செல்வராஜ் தலைமையில் நாளை (18.05.2026 - திங்கள் கிழமை) மாலை 6 மணி அளவில் தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்ட பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே தூத்துக்குடி வடக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணி துணை செயலாளர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: •14.05.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்கள் கூட்டம் சம்பந்தமாக, •முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் சம்பந்தமாக,•26.05.2026 அன்று மறைந்த மாவட்ட தி.மு. கழக செயலாளர் என்.பெரியசாமி அவர்களின் 9வது ஆண்டு நினைவுதினம் தொடர்பாக, •கழக வளர்ச்சி பணிகள் குறித்து

**பி.கீதா ஜீவன்,**

செயலாளர்,

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# சி.எம்.இராமசாமி

## மே 17 (1999)



**இளம் வயதிலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.**

**வடபெரும்பாக்கம் கிளைச் செயலாளராக மூன்று முறையும் – மாதவரம் ஒன்றிய துணைச் செயலாளராக இரண்டு முறையும் – மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர். குறிப்பாக, மிசா சட்டத்தை கண்டித்து, கறுப்புக் கொடி காட்டும் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

# தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக்கூட்டம்!

## மாவட்டக்கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் அறிவிப்பு!

*கம்பம், மே 17-*

*தேனி தெற்கு மாவட்டக்கழக செயலாளர்கம்பம் நா.இராமகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக்கூட்டம் இன்று (17.05.2026-ஞாயிற்றுக்கிழமை) , காலை 10.00 மணியளவில் கம்பம் நகரில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழக அவைத்தலைவர் த.மனோகரன் தலைமையில் நடைபெற உள்ளது.*



*இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது. எனவே, தேனி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பொறுப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*பொருள்: 1) கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 14.05.2026 அன்று நடைபெற்ற மாவட்டக்கழக செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து.*

*2) 2026 சட்டமன்ற பொதுத்தேர்தல் முடிவுகள் குறித்து.*

*3) கழக ஆக்கப்பணிகள்*

*இவ்வாறு தேனி தெற்கு மாவட்டக்கழக செயலாளர் கம்பம் நா.இராம கிருஷ்ணன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

# தேனி வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்செல்வன். எம்.பி. அறிக்கை!



*தேனி, மே 17-*

*தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி பாராளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்செல்வன். எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 14.05.2026 அன்று சென்னையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தியதின்படி தேனி வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நாளை (18.05.2026 - திங்கள் கிழமை) காலை 10.00 மணியளவில் தேனி ஏபிஎம் ஹோட்டலில் மாவட்ட கழக அவைத்தலைவர் பி.டி செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்திற்கு, முன்னாள் மற்றும் இந்நாள் நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர்கழக, மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள்,கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள்,அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு தேனி வடக்கு மாவட்ட கழக செயலாளரும் தேனி பாராளுமன்ற உறுப்பினருமான தங்கதமிழ்செல்வன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*பொருள்:*

*1.நடைபெற்று முடிந்த சட்டமன்ற தேர்தல் தொடர்பாக*

*2. கழக ஆக்கப்பணிகள்.*

# கொடைக்கானல் சுற்றுலாப் பயணிகளுக்குத் தடை!

*கொடைக்கானல், மே 17-*

*கொடைக்கானல் பேரிஜம் வனப் பகுதியில் புலிகள் நடமாட்டம் காணப்படுவதால், மதிக்கட்டான் சோலை, பேரிஜம் ஏரி, தொப்பி தூக்கி பாறை உள்ளிட்ட இடங்களுக்கு மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி இல்லை என வனத்துறை அறிவித்துள்ளது.*

*மலைகளின் இளவரசியான கொடைக்கானலுக்கு தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடு களில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். குறிப்பாக ஏப்ரல், மே மாதங்களில் கோடை விடுமுறையை கொண்டாட லட்சக்கணக்கானோர் வருவது வழக்கம். அதன்படி தற்போது கோடை விடுமுறை காரணமாக குடும்பத்துடன் சுற்றுலா பயணிகள் கொடைக்கானலுக்கு படையெடுத்து வருகின்றனர்.*




தென்காசி மாவட்டம் தென்காசி மாவட்ட திராவிட கழகம் சார்பில் புதிய பேருந்து நிலையம் அருகில் இந்தியா முழுவதும் நீட் தேர்வை முற்றாக ரத்து செய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் தி.க.மாவட்ட தலைவர் வீரன் தலைமையில் நடைபெற்றது.உடன் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், மரு.ராணிஸ்ரீ குமார் எம்.பி.தென்காசி நகர செயலாளர் சாதிர்,பொதுக்குழு உறுப்பினர் சாமித்துரை,ஒன்றிய செயலாளர் சீனித்துரை உள்பட திராவிடக் கழக நிர்வாகிகள்,கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உள்ளனர்.